# "பாடசாலையில் இடைநிலை மாணவர்கட்குப் பாலியல் வழிகாட்டல் தேவை"

யேசுஜயாடிலானி
உதவி விரிவுரையாளர்
கல்விபிள்ளைநலத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்
இலங்கை

இன்றைய நவீன மாந்தர்களின் உலகம் எவ்வளவுதான் இயந்திரத்தின் வழிகாட்டல்களில் மாற்றம் கண்டுகொண்டு சென்றாலும் மனித வழிகாட்டல்கள் என்பது இன்றும் மறுக்கப்படாத உண்மையாகத் திகழ்கின்றது. நடைமுறைக் கோட்பாடுகள் இயந்திரங்களில் எவ்வளவுதான் பொதிந்து கிடந்தாலும் அகவயப் பண்பு கொண்ட மனிதனின் நடத்தைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு முறையான வழிகாட்டல்களை வழங்குவதில் இயந்திரங்களைவிட நல் வழிகாட்டும் மனிதன் மேலானவனாகக் காணப்படுகின்றான். இவ்வண்ணமே கல்விகற்கும் ஒவ்வொரு மாணவர்களும் முறையாகவும், தெளிவாகவும் வழி நடத்தப்பட வேண்டியவர்கள். மாணவர்களை மையமாகக் கொண்டே ஒரு நாடு ஊட்டம் பெறுகின்றது. இதற்காகவே ஒவ்வொரு பாடசாலையும் உயிர்ப்பான குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்டிருகின்றது. இன்றைய மாணவர்களே நாளைய எதிர்காலம், நாளைய எதிர்காலத்தின் சிற்பிகளும் அவர்களே, என்பதைப் போன்ற பல தரப்பட்ட பேச்சுக்களை மேடைகளில் கேட்டிருக்கலாம். ஆனால் அவற்றைக் கல்வித் துறையில் உரிய முறையில் பிரயோகிக்கின்றோமா? என்பது குழப்பநிலையே.

குறிப்பாக ஆசியநாடுகளில் இடைநிலைக் கல்வித் துறையில் காணப்படும் பிரச்சினைகளுள் மாணவர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பான பிரச்சினைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் வெறும் ஏணிகளாக மட்டும் இருக்காமல் அந்த ஏணியின் இறுதி முனையை உரிய இடத்திற்கும் வைக்க வேண்டியவர்களாகக் காணப்படவேண்டும். எனவே மாணவர்களுக்குக் கல்வியை மட்டுமல்லாது சரியான எதிர்காலத்தினையும் உரியவழிகாட்டல்கள் மூலம் வழங்க வேண்டியது கல்வித் துறையோடு தொடர்புடைய ஒவ்வொருவருடையதும் பொறுப்பாகும்.

எதிர்காலச் சமூகங்களை நல்வழிப்படுத்துவது அந்தந்தச் சூழலில் உள்ள பாடசாலைகள் தான். ஆனால் இவ்வாறு பட்ட பாடசாலைகள் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் மட்டும் தான் அதிக அக்கறை செலுத்துகின்றன. இடைநிலைக் கல்வியைத் தொடரும் மாணவா;கள் ஒவ்வொருவரும் தனது எதிர் காலவாழ்வினைத் தீர்மானிக்கும் வளர்ந்துவரும் பருவத்தில் காணப்படுகின்றனர். அவர்களின் திடமான வளர்ச்சிக்கு சரியான வழிகாட்டல்கள் அவசியமாகும். பாடசாலைகள் மீது அண்மைக்காலங்களில் கூறப்பட்டு வருகின்ற ஒரு பிரதான குறைபாடு என்னவெனில் பாடசாலைகள் தமது உயர்மட்டக் குறிக்கோளைக் கைவிட்டு ஏனைய பாடசாலைகளைவிட தமது பாடசாலை முன்னணியில் திகழவேண்டும் என்பதற்காக மாணவர்களை பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பணிகளிலேயே கூடிய

கவனயீர்ப்பு செலுத்துகின்றன. ஆயினும் இதுதவிர அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளத்தினை உறுதியாக்குவதில் அதிக அக்கறை காட்டுவதில்லை.

திறமை இருந்தும் முறையான வழிகாட்டல்கள் இல்லாமல் தமது வாழ்க்கையை வீணாக்கிய மாணவர்களும் காணப்படுகின்றர். ஒவ்வொரு மாணவர்களின் தகுதி, தரத்திற்கு ஏற்றாற்போல் எதிர்கால வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை வழங்குவதில் இன்று பாடசாலைகள் அசமந்தநிலையைக் கடைப்பிடிக்கின்றன. நாட்டில் இன்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இங்கு பல்வேறு தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளுடன் எதிர்கால சிந்தனையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். உரிய வழிகாட்டல்கள் சரியான காலகட்டங்களில் கிடைக்காமையினால் மாணவர்கள் நெறி பிறழ்வான நடத்தைகளுக்கும் மனவெழுச்சிகளுக்கும் தம்மைத் தாமே ஆளாக்கிக்கொள்கின்றனர்.

குறிப்பாக சிரேஷ்ட இடைநிலை மாணவர்களே தமது எதிர்காலம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் கட்டத்தில் காணப்படுகின்றனர். இவர்களுக்கு கல்வி தொடர்பான வழிகாட்டல்களோடு பாலியல் மற்றும் மனவெழுச்சிகள் தொடர்பான வழிகாட்டல்களும் இன்று அவசியம் தேவைப்படுகின்றன. வீடுகளில் பெற்றோர்களின் மனரீதியான கட்டுப்பாடுகளில் இருந்து சுதந்திரமாக முடிவுகளை எடுக்கவிரும்பும் பிள்ளைகள் தமது சகபாடிகளின் கணிப்பினைச் சிறந்ததாகக்கொள்ளும் மனநிலையில் உள்ளனர். இதனால் தன்னிலைஅறியாமல் தீமையான காரியங்களில் சிக்கிக்கொள்கின்றனர். குறிப்பாக சிரேஷ்ட இடைநிலைப் பருவத்திலேயே சுய முடிவுகள் எடுக்கும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. எனவே இக்காலகட்டத்தில் பாடசாலைமட்ட ஆலோசனை வழங்கும் குழு ஒன்றினை முறையாக நடாத்துவது பாடசாலை முகாமைத்துவத்தின் தலையாய பொறுப்பாக இருக்கவேண்டும்.

எதிர்காலக் கல்வி ஆலோசனைகளோடு மட்டுமல்லாமல் பாலியல்ரீதியான முறையான வழிகாட்டல்களும் தகுதிவாய்ந்த ஆளணியினர் மூலம் நடாத்தப்படவேண்டும். ஏனெனில் இன்றைய நிலைப்பாட்டில் பாடசாலை மட்டத்தில் காணப்படும் இளம் பருவவயதினர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை பிரச்சினைகளின் பாதையிலேயே அதிகம் முகங் கொடுக்கின்றனர். எனவே இப்பிரச்சினைகளிலிருந்து காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் பாடசாலையை மையமாகக்கொண்ட ஆலோசனை வழிகாட்டல் ஆளணியினர் சார்பாகவே காணப்படுகின்றது. அதிகதிறமை இருந்தும் சிலமாணவர்கள் தேர்ந்தெடுத்த பாதை தவறாகக் காணப்பட்டால் அவர்களால் சமூகத்தில் பிரகாசிக்கமுடியாது. அதே போன்று குறிப்பிட்ட திறமையை மட்டும் வைத்துக்கொண்டு அத்திறமைக் கூடாக சரியான வழிகாட்டல்களின் மூலம் பிரகாசித்த மாணவர்களும் உள்ளனர். மாணவர்களுக்கு சரியான பாதைகள் கிடைக்கும் போதுதான் அவர்கள் முன்னேறுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். இது வெறுமனே கல்விப் பாதையில் மட்டும் இடம்பெறாமல் கட்டிளமைப்பருவத்தின் பாலியல் தொடர்பான சரியான பாதைகளையும் வழிப்படுத்துவதாக அமையவேண்டும். ஆனால், இன்றையநிலையில் பாலியல் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமும், வழிகாட்டல்களும் வழங்குவதில் ஆசிரிய ஆளணியினர் தயக்கம் காட்டுகின்றனர். இத்தகு தயக்கங்கள் ஒருசிலமாணவர்களின் எதிர்காலத்தினைப் பாதிப்பதற்கான காரணியாகவும் அமைகின்றன.

பாடசாலைகளில் வழிகாட்டல்கள் வழங்கும் ஆளணியினர் வளர்ந்த மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு முறையான தகுதி அற்றவராகக் காணப்படல், அதாவது வழிகாட்டல் ஆலோசனை தொடர்பான முறையான நீண்டநாள் பயிற்சிகள் அவர்கள் எடுப்பதாகவில்லை. அதேவேளை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை

வழங்குவதற்கான சரியான நேர ஒதுக்கீடு செய்யாமையும், வெறும் கணிப்பீடுகளுக்கும், கற்பித்தல் முறைகளுக்கும் அதிக நேரத்தினை ஒதுக்குவதன் மூலம் மாணவ வழிகாட்டல்கள் குறைக்கப்படும் நிலையும் இன்று பாடசாலைகளில் காணப்படுகின்றது.

அத்தோடு போதிய விளக்கமும் தெளிவுமில்லாமல் மாணவர்கள் ஏதோ பாடங்களைத் தெரிவு செய்வதும், பின்னர் மாற்றுவதுமான சூழ்நிலையும் இன்று பாடசாலைகளில் காணப்படுகின்றது. தமது எதிர்கால இலட்சியத்திற்கு ஏற்பபாடத் தெரிவுகளை மேற்கொள்ளாமை போன்றவற்றினால் மாணவர்கள் மனவெழுச்சிகளால் அவதியுறும் நிலையும் இன்று காணப்படுகின்றது. அத்தோடு சிரேஷ்ட மாணவர்களுக்குப் பாலியல் தொடர்பான சரியான வழிகாட்டல்கள் முறையாகக் கிடைக்கப்படாமை, பாலியல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்குவதில் ஆசிரியர்கள் காட்டுகின்ற தயக்கம், காதல் விவகாரங்களினால் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதும், அதிகரித்த பாலியல் கொடுமைகள், சிலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதும் மாணவர்கள் மத்தியில் பெரும் இடையூறாக உள்ளது.

எனவே முறையான, தெளிவான வழிகாட்டல்கள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுவதில் பாடசாலை நிர்வாகம் அதிக கவனம் செலுத்தவேண்டும். வழிகாட்டல் ஆலோசனைச் சேவை என்பது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதாகும். மாணவர்கள் பாடசாலையை விளங்கிக்கொள்ளவும், கல்வித்துறைத் தெரிவுகளை பொருத்தமாக மேற்கொள்ளவும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை உதவுகின்றது. ஒருவர் சுயமாகவே முடிவெடுக்கும் ஆற்றலினை வழிகாட்டல் செயற்பாடு வழங்க வேண்டும். மாணவர்கள் தமது திறமையை அறிந்து அதற்கேற்றவாறு தமது ஆற்றல்களை சூழலிற்குப் பிரயோகித்துப் பெறக்கூடிய தொழிலைப் பெற்று சமூகத்தில் உரிய இடத்தினைப் பிடித்துக்கொள்வதில் ஏற்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகொள்ள வழிகாட்டுவது இச்சேவையின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. விஞ்ஞானரீதியான வளர்ச்சிப்போக்கில் உடல்ரீதியாக சிகிச்சை அளிப்பதனைப் போன்று உளரீதியான சிகிச்சையும் வழங்கப்பட வேண்டும் என்கின்றதான கருத்து மேலோங்கியதற்கிணங்க கல்வி தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மாணவர்களுக்கு வழங்கப்படுவது அவசியமாகக் கருதப்பட்டன. தொழில் வழிகாட்டல்கள் மட்டுமல்லாது பாலியல், மனவெழுச்சிசார் வழிகாட்டல்களும் இன்றைய மாணவ சமுதாயத்திற்கு அவசியமானதாகவே இருக்கின்றது. இதன் மூலம் மாணவா;களுக்கு கற்பித்தற் பணியோடு இணைந்தவிதத்தில் வழிகாட்டல் ஆலோசனைகளையும் உரியவாறு வழங்குவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும். ஏனெனில் தற்போது பரீட்சைக்கும், பாடத்தெரிவிற்குமே பாட சாலைகள் வழிகாட்டுகின்ற நிலை உள்ளதாக அதிகளவில் அறியப்படுகின்றன. ஆனால் ஒழுக்கம் சார்பான நிலைகள் நம் மத்தியில் அதிகளவில் ஓரம் கட்டப்பட்ட நிலைக்குச் செல்கின்றன. மேற்குறிப்பிட்டவாறு அதிகரித்த துஸ்பிரயோகம், இளவயது திருமணம், காதல் தற்கொலைகள் ,கொலைகள், ஆண் - பெண் சமத்துவமற்ற நிலைகள், கருக்கலைப்புக்கள், கற்றலில் கவனக்குறைவு, இடைவிலகல், தவறான தொடர்புகள், முரண்பாடுகள் போன்ற பல பிரச்சினைகள் மாணவப்பருவத்தினரிடையேயே அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக இடைநிலை மாணவர்களிடையேயே இப்பிரச்சினை தலைதூக்கிக் காணப்படுகிறது. ஆகவே சமூகத்தின் தூணாக காணப்படுகின்ற பாடசாலைகள் மாணவர்களிற்கு பரீட்சை விளைவுகளை மட்டும் கவனத்தில்கொள்ளாது பாலியல்ரீதியான ஒழுக்கங்களை கல்வியில் பாடத்திட்டம், சமய ஒழுக்கங்கள், பாடசாலைக்கூட்டங்கள், வகுப்பறைக் கற்பித்தல்கள், இணைபாடவிதானச் செயற்பாடுகள், மற்றும் முக்கியமாக வழிகாட்டல் ஆலோசகர்களின் பாலியல்ரீதியான வழிகாட்டல்களை முறையாக வழங்கும்போது மாணவர்களுடன் சார்ந்து நாட்டின் ஒழுக்க ரீதியான தரமும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.